<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 66/2019 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மாரியம்மாள் | நாள் | 25.02.2025 |
| கணவர் பெயர் | பாலகிருஷ்ணன் | | |

**<u>வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொர்ச்சி:–</u>**

9) தாவா சொத்து குறித்து கடந்த 1964ம் வருடம் முதல் தற்போது வரை என்னென்ன வில்லங்கங்கள் ஏற்பட்டுள்ளது என்பது குறித்து நான் ஏதேனும் வில்லங்க சான்றிதழ் பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால், இல்லை. என் தந்தையின் மூத்ததாரத்து மற்றும் இளையதாரத்து ஆண் வாரிசுகளால், எங்கள் குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை ஏற்படுத்தப்பட்டு, அதன் பேரில் அவரவர்கள் பாகங்கள் பிரிக்கப்பட்டு, மேற்படி பாகங்களை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்து, தற்போது மூன்றாம் நபர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், அவ்வாறு யாரும் சொத்தை அனுபவிக்கவில்லை. தற்போது மேற்படி சொத்துக்கள் காலியாகத்தான் உள்ளது.

10) 18.05.1994ம் தேதியில் மேற்படி என் தந்தையும், அவரது மகன்களும் சேர்ந்து எங்கள் குடும்ப சொத்தின் ஒரு பகுதியை பொன்னாயாள் என்பருக்கு விற்பனை செய்து, தற்போது மேற்படி பொன்னாயாள் அனுபவித்து வருகிறார் என்றால், அவ்வாறு விற்கவில்லை. அவ்வாறு விற்பனை செய்திருந்தாலும் அந்த பத்திரம் செல்லாது. அதேபோல், என் சகோதர் அங்கமுத்தும் அவரது வாரிசுகளும் சேர்ந்து 1996ம் வருடத்தில் ராஜாமணியம்மாள் என்பவருக்கு ச.எண்.362/6ல் உள்ள சொத்தை விற்பனை செய்துள்ளனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

11) என் மற்றொரு சகோதரர் விஸ்வநாதன் 1997ம் வருடத்தில் ச.எண்.362/5ல் உள்ள சொத்தை ராமசாமி என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், அது குறித்தும் எனக்கு தெரியாது. மேற்படி விஸ்வநாதன் 2003ம் வருடத்தில் சரோஜா என்பவருக்கு மேற்படி ச.எண்.362/5ல் மேலும் சில நிலங்களை விற்பனை செய்துள்ளார் என்றால், அது குறித்தும் எனக்கு தெரியாது. வைத்திலிங்கம் என்பவர் என் சகோதரரா என்றால், என் தந்தையின் மூத்ததாரத்து மகன் ஆவார். மேற்படி வைத்தியலிங்கம் பாகபிரிவினை

படி பூர்வீக சொத்தில் தனக்கு வந்த பாகத்தை கடந்த 2003ம் வருடத்தில் அவரது மகனுக்கு தானசெட்டில்மெண்ட் அளித்துள்ளார் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

12) மேற்படி எங்கள் குடும்ப பாக சொத்துக்களை எங்கள் குடும்ப பாகஸ்தர்களும், அவர்களிடமிருந்து கிரயம் பெற்றவர்களும் அனுபவித்து வருகிறார்கள் என்றால், அது குறித்து எனக்க தெரியாது. ஆனால் மேற்படி சொத்து என் பாட்டனாருடையது. அதில் தற்போது வரை முழுமையாக எந்த விற்பனையும் செய்யப்படவில்லை. நான் சொல்வது தவறானது என்றாலும், என் தந்தையின் மூத்த மற்றும் இளைய தாரத்து ஆண் வாரிசுகள் எங்கள் பூர்வீக குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை செய்துகொண்டும். அவரவர்கள் பாகத்தை பொறுத்து, விற்பனைகள் செய்தும், மேற்படி சொத்துக்களை ஆண்டு, அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், மேற்படி சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரிந்தும், தற்போது வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

13) தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் என்னால் இ.ம.எண்.2/2019 என்ற மனுவில் எ.ம.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டவை என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. தற்போது புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வீடு உள்ளதா என்றால், அவ்வாறு வீடு இல்லை. ஆனால், ஐயனார் கோவில் உள்ளது. மேற்படி புகைப்படங்களில் எங்கேனும் கோவில் காணப்படுகிறதா என்றால், இல்லை. மேற்படி புகைப்படங்களில் காணப்படும் தகர செட் அமைப்பு தற்போது உள்ளதா என்றால், உள்ளது.

14) கடந்த ஒரு வருடங்களாக மேற்படி பகுதியில் ஏதேனும் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. தற்போது

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 கிரய ஆவணத்தின் படி 28.11.1990ம் தேதியில் காலம் சென்ற 1ம் வாதியின் பெயரில் தாவா சொத்தை என் தந்தையும், எனது சகோதரர்களும், அவர்களது வாரிசுகளும் கிரயம் அளித்துள்ளனர் என்ற விவரத்தை நான் தெரிந்துகொண்டேனா என்றால், மேற்படி கிரயம் குறித்து எனக்கு தெரியாது. மேலும் அவ்வாறு ஒரு கிரயம் அளித்திருந்தாலும் அது செல்லாது.

15) 1ம் வாதி வழக்கு தாக்கல் செய்தபோதே தன் பெயரிலுள்ள கிரய ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள நிலையில், தற்போது இவ்வழக்கில் பின்னிட்டாவது மேற்படி கிரய ஆவணம் குறித்து நான் தெரிந்துகொண்டேனா என்றால், இல்லை. மேற்படி 1ம் வாதியின் பெயரிலுள்ள கிரய ஆவணம் செல்லாது என்றாவது நான் இவ்வழக்கிலோ அல்லது தனியாகவோ ஏதேனும் வழக்கு தாக்கல் செய்து, பரிகாரம் கோரியுள்ளேனா என்றால், கோரியுள்ளேன். கடந்த 40 வருடங்களாக எங்கள் குடும்பத்திற்குள் நாங்கள் அனைவரும் சுமூகமான உறவில் உள்ளோமா என்றால், எப்போதாவது பேசிக்கொள்வோம்.

16) கடந்த 40 ஆண்டுகளாக நானோ, என் குடும்ப உறுப்பினர்களோ, மேற்படி எங்கள் குடும்ப சொத்துக்களில் கூட்டாக விவசாயம் செய்து வந்தோமா என்றால், என்னை திருமணம் செய்துகொடுத்துவிட்டதால், நான் அவ்வப்போது தாவா சொத்திற்கு வந்து ஏதாவது வேலைகள் செய்துவிட்டு செல்வேன். நான் என் குடும்ப சொத்துக்களில் கூட்டாக விவசாயம் செய்ததாக சொல்லும் நிலையில், என் பெயரில் ஏதாவது கந்தாயம் செலுத்தப்பட்டுள்ளதா என்றால், என் பெயரில் இல்லை. என் தந்தை பெயரிலும், என் பாட்டனார் பெயரிலும் உள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும், ஒருபோதும் நான் என் பூர்வீக சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றாலும், சரியல்ல. நான் பிறப்பதற்கு முன்பே எங்கள் குடும்ப சொத்துக்கள் பாகபிரிவினை செய்யப்பட்டுவிட்டதால், நான் அதன் அனுபவத்திலேயே இல்லை என்றால், சரியல்ல.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.